உரித்தான வாழ்வுக்கு
உயிர் தந்த தியாகத்தால்
உலகத்தில் முடி சூடினோமே 2

உங்கள் பெருமிதத் தால் அல்லோ
களப்போரில் தினம் வெற்றி
சிகரத்தில் நாம் ஏறினோம் 2

பலத்தாலே நிமிர்ந்தோமே போரில்
தேசப்பகை வந்தது எம்மோடு நேரில்
பலம் தந்த மாவீரர் நாளில் நாமும்
பூ வைத்து தொழுகின்றோம் பாரிர் 2

உரித்தான வாழ்வுக்கு
உயிர் தந்த தியாகத்தால்
உலகத்தில் முடி சூடினோமே 2

பகைவெல்ல அணியாக போவிர்கள் அழகாக
பார்த்தாலே மெய்சிலிர்க்கும் நீங்கள்
மழை என்ன பனி என்ன பசி என்ன
படும் துயர் கேட்டாலே நெஞ்சரிக்கும்
முன் நின்று போராடி பகைவீழ்த்தி உயிர் வீசி 2
தமிழ் மானம் காத்தீர்களே
சாள்ஸ் அன்ரனி படையணி வீரத்தை உலகத்தின் 2
முகத்தினில் பொறித்தீர்களே

உரித்தான வாழ்வுக்கு
உயிர் தந்த தியாகத்தால்
உலகத்தில் முடி சூடினோமே 2

தளபதிகள் வீரர்கள் பலபேர்கள் வீழ்ந்தார்கள்
பணிந்தோமா பணியோமடா
நாங்கள் ஆற்றல அதிசயம் படைக்கின்ற
படையணி அஞ்சோமே அஞ்சோமட
முதலோனால் மொழிகின்ற திசைதன்னில் பொழிகின்ற 2
மழைமேகம் நாம் அல்லவா
சாள்ஸ் அன்ரனி படையணி படைக்கின்ற சாதனை 2
பற்பல நூல் அல்லவா

உரித்தான வாழ்வுக்கு
உயிர் தந்த தியாகத்தால்
உலகத்தில் முடி சூடினோமே 2